# தமிழ் மொழி, இலக்கியம் (9574)

## மதிப்பீட்டின் நோக்கங்கள்

2014-ஆம் ஆண்டு கல்வி அமைச்சின் பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவினால் உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகப் புகுமுகநிலைக்கான பாடத்திட்டத்தின் முக்கிய நோக்கம் மாணவர் அடைந்துள்ள அடிப்படை மொழித் திறன்களாகிய கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகியவற்றோடு பேச்சுவழியாகவும் எழுத்துவழியாகவும் அமைந்த இருவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்களை வளர்த்தல் ஆகும்.

இப்பாடம் மொழியையும் இலக்கியத்தையும் உள்ளடக்கியிருக்கிறது. மாணவர்களின் மொழித் திறன் வளர்ச்சிக்கும் தமிழ் இலக்கியம் பற்றி அறிந்துகொள்வதற்கும் இப்பாடம் வழிவகுக்கும். மேலும், கவிதை, நாடகம், நாவல், சிறுகதை ஆகிய இலக்கிய வகைகளைப் படித்து மகிழ்வதற்கும் அவற்றைப் பற்றிக் கலந்துரையாடுவதற்கும் மாணவர்களுக்குத் தேவையான பயிற்சியை இலக்கியம் அளிக்கும். மேற்கண்ட நோக்கங்களை அடைவதற்குத் தேவையான திறன்களை மாணவர் பெற்றிருப்பர். இத்திறன்களைச் சோதிப்பதே மதிப்பீட்டின் நோக்கங்கள் ஆகும். மதிப்பீட்டின் நோக்கங்கள் பின்வருமாறு:

- சம்பவங்களையும் அனுபவங்களையும் சிறந்த அமைப்புமுறையில் விவரித்து எழுதுதல்
- கருத்துகளைப் பொருத்தமான ஆதாரங்களைப் பயன்படுத்தி விளக்கியும் நியாயப்படுத்தியும் விவாதித்தும் எழுதுதல்
- பரந்துபட்ட தலைப்புகளையொட்டிக் கருத்துரை எழுதுதல்
- கருத்துக்களம், வலைப்பூக்கள், மின்னஞ்சல் போன்றவற்றின் வழியாகக் கருத்துப் பரிமாற்றம் நிகழ்த்துதல்
- பலதரப்பட்ட பனுவல்களைப் படித்து அவற்றின் உட்பொருளைப் புரிந்துகொள்வதோடு அவற்றை மதிப்பீடு செய்தல்
- பழங்கால, தற்கால கவிதைகள், நாடகம், நாவல், சிறுகதை ஆகிய இலக்கிய வகைகளைப் படித்து மகிழ்வதோடு அவற்றிற்குத் திறனாய்வு நோக்கில் கருத்துகள் எழுதுதல்

# தேர்வு அமைப்புமுறை

இப்பாடம் மொத்தம் மூன்று வினாத்தாள்களைக் கொண்டது.

## வினாத்தாள் 1: (2 மணி 15 நிமிடங்கள், 70 மதிப்பெண்கள், 35%)

இத்தாள் **பகுதி 1**, **பகுதி 2** ஆகிய இரு பிரிவுகளை உள்ளடக்கியது.

### பகுதி 1: கட்டுரை (1 மணி 15 நிமிடங்கள், 35 மதிப்பெண்கள்)

இப்பிரிவில் கொடுக்கப்படும் நான்கு தலைப்புகளுள் ஏதேனும் ஒன்றினைப் பற்றி 350 சொற்களுக்குக் குறையாமல் விடை எழுதுதல் வேண்டும். கட்டுரைத் தலைப்புகளும் கருத்து விளக்கப்படமும் இப்பகுதியில் இடம்பெறும்.

### பகுதி 2: கருத்தறிதலும் மொழிப் பயன்பாடும் (1 மணி நேரம், 35 மதிப்பெண்கள்)

இப்பகுதியில் ‘அ’, ‘ஆ’ ஆகிய பிரிவுகள் இருக்கும்.

#### ‘அ’ பிரிவு (முன்னுணர்வுக் கருத்தறிதல்)

இப்பிரிவில் கொடுக்கப்படும் ஓர் உரைநடைப் பகுதியில் ஐந்து கோடிட்ட இடங்கள் இடம்பெறும். மாணவர்கள் மிகப் பொருத்தமான சொற்களைக்கொண்டு கோடிட்ட இடங்களை நிரப்ப வேண்டும்.

#### ‘ஆ’ பிரிவு (சுயவிடைக் கருத்தறிதல்)

இப்பிரிவில் ஓர் உரைநடைப் பகுதியையொட்டி ஐந்து சுயவிடை வினாக்கள் கேட்கப்படும். அவற்றுள் ஒரு வினா சொற்பொருளை ஒட்டி அமையும். மாணவர்கள் வினாக்களுக்கு விடைகளைக் கண்டறிந்து சொந்த நடையில் எழுத வேண்டும்.

## வினாத்தாள் 2 (மின்னியல் தேர்வு): (1 மணி நேரம், 30 மதிப்பெண்கள், 15%)

### சுயவிடைக் கருத்தறிதல்

இப்பிரிவில் இரண்டு உரைநடைப் பகுதிகள் கொடுக்கப்படும். அவற்றையொட்டி நான்கு சுயவிடை வினாக்கள் கேட்கப்படும். மாணவர்கள் வினாக்களுக்கு விடைகளைக் கண்டறிந்து சொந்த நடையில் தட்டச்சு செய்ய வேண்டும். அவற்றுள் ஒரு வினா இலக்கணக் கூறுகளையொட்டியும் மற்றொரு வினா கருத்துரை எழுதுதலையொட்டியும் அமையும். கருத்துரை எழுதுதலையொட்டி அமையும் வினாவுக்கு மாணவர்கள் 140 சொற்களில் தங்கள் விடையைத் தட்டச்சு செய்ய வேண்டும். கருத்துரை வினாவுக்கு 15 மதிப்பெண்கள் வழங்கப்படும்.

## <u>வினாத்தாள் 3</u> : (3 மணி நேரம், 100 மதிப்பெண்கள், 50%)

இவ்வினாத்தாள் இலக்கியப் பாட வினாக்களை உள்ளடக்கியது. இவ்வினாத்தாளில் மொத்தம் நான்கு பிரிவுகள் இருக்கும். அவையே, நாவல், சிறுகதை, நாடகம், கவிதை ஆகியனவாகும். ஒவ்வொரு பிரிவிலும் இரண்டு வினாக்கள் என்ற அடிப்படையில் மொத்தம் எட்டு வினாக்கள் கேட்கப்படும். மாணவர்கள் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு வினாவிற்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு வினாவிற்கும் 25 மதிப்பெண்கள் வழங்கப்படும். இவ்வினாத்தாள் திறந்த புத்தக மதிப்பீட்டு முறையில் அமைந்திருக்கும்.

### <u>'அ' பிரிவு</u>: நாவல்

பால்மரக் காட்டினிலே (அகிலன்)

### <u>'ஆ' பிரிவு</u>: சிறுகதை

1) இது மிஷின் யுகம் (புதுமைப்பித்தன்)
2) ஓர் ஆன்மாவின் திரை அகற்றப்படுகிறது (நா. கோவிந்தசாமி)
3) விடியுமா? (கு.ப.ராஜகோபாலன்)
4) A12662901 (சுஜாதா)
5) இலட்சியங்களின் ஊனங்கள் (மா. இளங்கண்ணன்)
6) ஆயிஷா (இரா நடராசன்)
7) நாடோடிகள் (இராம. கண்ணபிரான்)
8) தமிழுக்கு அமுதென்று பேர் (கனகலதா)

### <u>'இ' பிரிவு</u>: நாடகம்

1) சிங்கப்பூர் மாப்பிள்ளை (சே. வெ. சண்முகம்)
2) காதல் என்ன விலை? (டி. டி. தவமணி)

### <u>'ஈ' பிரிவு</u>: கவிதை

1) யாயும் ஞாயும் யாரா கியரோ (செம்புலப் பெயனீரார்))
2) நிலத்தினும் பெரிதே (தேவகுலத்தார்)
3) ஈன்ற புறந்தருதல் (பொன்முடியார்)
4) யாதும் ஊரே யாவரும் கேளிர் (கணியன் பூங்குன்றனார்)
5) திருக்குறள்: அன்புடைமை
   ஆள்வினையுடைமை
6) தமிழ் (பாரதியார்)
7) எந்நாளோ? (பாரதிதாசன்)
8) எறும்பு-மனிதன்-இயற்கை (ந பழனிவேலு)
9) இயற்கை இன்பம் (சிங்கை முகிலன்)
10) சாந்திதரும் அந்தி (ஆ பழனி)
11) இரவிலும் பகலைப் பார் – அமலதாசன்
12) கல்லின் காயம் (அப்துல் ரகுமான்)
13) புல் (நா காமராசன்)
14) மரம் (வைரமுத்து)
15) நூல் (க. து. மு. இக்பால்)
16) ரப்பர் மரங்கள் (கோ. புண்ணியவான்)
17) சுயம் (நூர்ஜஹான் சுலைமான்)
18) தாய்மையின் காத்திருப்பு (மலர்விழி இளங்கோவன்)
19) கழிவறைக் குழந்தை (ஷாஹுல் ஹமீது)
20) முகவரிகள் தொலைவதில்லை (மாதங்கி)
21) தூங்காதே தம்பி தூங்காதே! (பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்
22) மனிதன் என்பவன் தெய்வமாகலாம் (கண்ணதாசன்)
23) கூண்டுக்கு விடுதலை (நா. முத்துக்குமார்)
24) குருவிக்கூடுகள் & கடவுளைத்தேடி (ஏ. தேவராஜன்)
25) சோம்பல் மாணவன் & எறும்புகள் வரும் நேரம் (ந. பச்சைபாலன்)

## தேர்வு விவர அட்டவணை

**சிங்கப்பூர்-கேம்பிரிட்ஜ் பொதுக் கல்விச் சான்றிதழ் மேல் நிலைத் தேர்வு**
**உயர்தரம் 2 தமிழ்மொழி, இலக்கியம்**

| **தாள் (நேரம்)** | **பொருளடக்கம்** | **வினா வகை** | **வினாக்களின் எண்ணிக்கை** | **மதிப்பெண் (மதிப்பளவு)** |
|---|---|---|---|---|
| 1<br><br>(1 மணி 15 நிமிடங்கள்) | **பகுதி 1**<br><br>கட்டுரை (350 சொற்கள்)<br>வகைகள்: நிகழ்வு, விளக்கம், வருணனை, கருத்துரைப்பு | கட்டுரை | 4<br>(ஒரு வினாவிற்கு விடையளித்தல்) | 35 (17.5%) |
| (1 மணி நேரம்) | **பகுதி 2**<br><br>கருத்தறிதலும் மொழிப் பயன்பாடும்<br><br>**‘அ’ பிரிவு**<br><br>முன்னுணர்வுக் கருத்தறிதல் | கோடிட்ட இடங்களை நிறைவு செய்தல் | 5 | 5 (2.5%) |
| | **‘ஆ’ பிரிவு**<br><br>சுயவிடைக் கருத்தறிதல்<br>(சொற்பொருள் வினா உட்பட) | சுயவிடை | 5 | 30 (15%) |
| 2<br>**(மின்னியல் தேர்வு)**<br><br>(1 மணி நேரம்) | கருத்தறிதலும் மொழிப் பயன்பாடும்<br><br>சுயவிடைக் கருத்தறிதல்<br>(இலக்கண வினாவும் கருத்துரை வினாவும் உட்பட) | சுயவிடை | 4 | 30 (15%) |
| 3<br><br>(3 மணி நேரம்) | இலக்கியத் திறனாய்வு<br>**‘அ’ பிரிவு:** நாவல்<br>**‘ஆ’ பிரிவு:** சிறுகதை<br>**‘இ’ பிரிவு:** நாடகம்<br>**‘ஈ’ பிரிவு:** கவிதை | சுயவிடை | 2<br>2<br>2<br>2<br>(ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு வினா என்ற அடிப்படையில் மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை அளித்தல்) | 100 (50%) |